**ஜனவரி – 01**

# TNPSC துளிகள்

- ❖ மத்திய உள்துறை அமைச்சரான அமித் ஷா புது தில்லியில் உள்ள மத்திய ரிசர்வ் காவல் படையின் தலைமையகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
    - ○ இந்த நிகழ்வின் போது பொது மக்களுக்கும் மிக முக்கிய நபர்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள வீரர்களுக்காக "கருட்" என்ற ஒரு புதிய சின்னத்தையும் இவர் வெளியிட்டார்.
- ❖ திருடப்பட்ட/தொலைந்து போன கைபேசிகளை முடக்கி வைப்பதற்காகவும் அதனைக் கண்டுபிடிப்பதற்காகவும் மத்தியக் கருவி அடையாளப் பதிவு முறையை மத்திய தகவல் தொலைத் தொடர்புத் துறை அமைச்சரான ரவிசங்கர் பிரசாத் புது தில்லியில் தொடங்கியுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## ஸ்வச் சர்வேக்சன் குழுமத் தரவரிசை 2020

- ❖ மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று புது தில்லியில் ஸ்வச் சர்வேக்சன் குழுமத் தர வரிசையை வெளியிட்டுள்ளது.
- ❖ இது ஒரு தூய்மைக் கணக்கெடுப்பு ஆகும். இது போட்டிமிக்க கூட்டாட்சிக்கு உதவுகின்றது.
- ❖ 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பிரிவில், இந்தூர் நகரம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தூர் நகரம் இந்தக் குறியீட்டில் முதல் இடத்தில் உள்ளது (2017, 2018, 2019).
- ❖ இதில் இந்தூரைத் தொடர்ந்து, போபால் மற்றும் சூரத் ஆகிய நகரங்கள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன.
- ❖ ஒரு லட்சத்துக்கும் 10 லட்சத்துக்கும் இடையிலான மக்கள் தொகை கொண்ட பிரிவில், ஜாம்ஷெட்பூர் நகரம் முதலாவது இடத்திலும் புது தில்லி இரண்டாவது இடத்திலும் கார்கோன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.



**Top 20 Cities in >10 Lakh Population Category**

| Quarter 1 | | | Quarter 2 | | |
|---|---|---|---|---|---|
| Rank | State | ULB | Rank | State | ULB |
| 1 | MADHYA PRADESH | INDORE | 1 | MADHYA PRADESH | INDORE |
| 2 | MADHYA PRADESH | BHOPAL | 2 | GUJARAT | RAJKOT |
| 3 | GUJARAT | SURAT | 3 | MAHARASHTRA | NAVI MUMBAI |
| 4 | MAHARASHTRA | NASHIK | 4 | GUJARAT | VADODARA |
| 5 | GUJARAT | RAJKOT | 5 | MADHYA PRADESH | BHOPAL |
| 6 | MAHARASHTRA | PIMPRI CHINCHWAD | 6 | GUJARAT | AHMEDABAD |
| 7 | GUJARAT | AHMEDABAD | 7 | MAHARASHTRA | NASHIK |
| 8 | MAHARASHTRA | NAVI MUMBAI | 8 | MAHARASHTRA | GREATER MUMBAI |
| 9 | UTTAR PRADESH | ALLAHABAD | 9 | UTTAR PRADESH | ALLAHABAD |
| 10 | MAHARASHTRA | VASAI VIRAR | 10 | UTTAR PRADESH | LUCKNOW |
| 11 | CHANDIGARH | CHANDIGARH | 11 | MADHYA PRADESH | JABALPUR |
| 12 | MAHARASHTRA | PUNE | 12 | MAHARASHTRA | PUNE |
| 13 | MAHARASHTRA | GREATER MUMBAI | 13 | MADHYA PRADESH | GWALIOR |
| 14 | UTTAR PRADESH | VARANASI | 14 | MAHARASHTRA | PIMPRI CHINCHWAD |
| 15 | UTTAR PRADESH | KANPUR | 15 | MAHARASHTRA | NAGPUR |
| 16 | UTTAR PRADESH | LUCKNOW | 16 | MAHARASHTRA | KALYAN DOMBIVALI |
| 17 | MAHARASHTRA | KALYAN DOMBIVALI | 17 | MAHARASHTRA | VASAI VIRAR |
| 18 | CHHATTISGARH | RAIPUR | 18 | ANDHRA PRADESH | VIJAYAWADA |
| 19 | ANDHRA PRADESH | VISAKHAPATNAM | 19 | UTTAR PRADESH | VARANASI |
| 20 | ANDHRA PRADESH | VIJAYAWADA | 20 | GUJARAT | SURAT |

# சர்வதேசச் செய்திகள்

## அவாங்கார்ட் மீயொலி வேக ஏவுகணை அமைப்பு

- ரஷ்யாவின் இராணுவமானது "அவாங்கார்ட் மீயொலி வேக ஏவுகணை அமைப்பு" என்ற ஒரு புதிய கண்டங்களுக்கிடையேயான ஆயுதத்தைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளது.
- இது ஒலியின் வேகத்தை விட 27 மடங்கு வேகமாக பறக்கும் திறன் கொண்டது (மாக் 20ஐ விட வேகமாக).
- இது ரஷ்ய இராணுவத்தின் முதலாவது அவாங்கார்ட் மீயொலி வேக கண்டங்களுக்கிடையேயான பாலிஸ்டிக் வகை ஏவுகணை (intercontinental ballistic missile - ICBM) ஆகும்.
- இந்த அமைப்பு இதற்கு முன்னர் "திட்டம் 4202" என குறிப்பிடப் படுகின்றது.




# பொருளாதாரச் செய்திகள்

## மின்னணு முறையிலான ஏலத்திற்கான இணையதளம் – eBkray

- மத்திய நிதியமைச்சரான நிர்மலா சீதாராமன் மின்னணு முறையிலான

ஏலத்திற்கான இணையதளமான “eBkray” ஐத் தொடங்கியுள்ளார்.

- இந்த இணையதளமானது வங்கிகளால் இணைக்கப்பட்ட சொத்துக்களை ஆன்லைனில் ஏலம் விட உதவ இருக்கின்றது.
- “இந்திய வங்கிகளின் ஏல அடமானச் சொத்துகள் குறித்த தகவல்” தளம் என்பது மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய வங்கிகள் சங்கத்தின் ஒரு முயற்சியாகும்.
- பொதுத் துறை வங்கிகளில் தொடங்கி, வங்கிகளால் ஆன்லைனில் ஏலம் விடப்பட வேண்டிய அடமானச் சொத்துக்களின் விவரங்களை வழங்குவதற்கான தளத்தை ஏற்படுத்துவதற்காக இது தொடங்கப் பட்டுள்ளது.
- தற்போது 21 வங்கிகள் இந்த இணையதளத்தில் உள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விண்வெளி வீரரான கிறிஸ்டினா கோச்

- நாசாவில் (தேசிய வானூர்தி மற்றும் விண்வெளி நிர்வாகம்) பணியாற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி வீரரான கிறிஸ்டினா கோச் என்பவர் ஒரு பெண்ணினால் மேற்கொள்ளப்பட்ட ஒரே விண்வெளிப் பயணத்தின் போது நீண்ட நாட்கள் அங்கு தங்கியதற்கான சாதனையை உருவாக்கியுள்ளார்.
- 2016 - 2017 ஆம் ஆண்டில் முன்னாள் விண்வெளி நிலையத் தளபதியான பெக்கி விட்சன் என்பவர் 288 நாட்கள் அங்கு தங்கி இருந்தார். இச்சாதனையை கிறிஸ்டினா கோச் முறியடித்துள்ளார்.
- இவர் 2019 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் தேதி முதல் சர்வதேச விண்வெளி நிலையத்தில் (International Space Station - ISS) உள்ளார்.
- இவர் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பூமிக்கு திரும்பும் நேரத்தில் 300 நாட்களுக்கு மேல் விண்வெளியில் கழித்திருப்பார்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## வனங்களின் நிலை குறித்த அறிக்கை - 2019

- மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சரான பிரகாஷ் ஜவ்டேகர் 2019 ஆம் ஆண்டின் வனங்களின் நிலை குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.
- இது 2003 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒரு முறை வெளியிடப் படுகின்றது.
- இது டேராடூனில் உள்ள இந்திய வனக் கணக்கெடுப்பு நிறுவனத்தினால் (Forest Survey of India - FSI) தயாரிக்கப் பட்டுள்ளது.
- இது காடு மற்றும் மரம், மூங்கில் வளங்கள், கார்பன் இருப்பு & காட்டுத் தீ ஆகியவற்றை மதிப்பிடுகின்றது.
- இந்த அறிக்கையின் படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டின் வனப் பரப்பானது 5,188 சதுர கி.மீ அதிகரித்துள்ளது.
- இருப்பினும், வனப் பகுதியின் இந்த அதிகரிப்பானது வனப் பகுதிக்கு வெளியே நிகழ்ந்து உள்ளது.
- 2017 ஆம் ஆண்டிலிருந்து வனப் பகுதியில் 301 சதுர கி.மீ அடர்த்தியான காடுகளின்

அதிகரிப்பு மட்டுமே நடந்துள்ளது.

- ❖ கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,145 சதுர கி.மீ அடர்த்தியான காடுகளின் இழப்பு நடந்துள்ளது. இந்தக் காடுகள் வனங்கள் அல்லாதவையாக மாறியுள்ளன.
- ❖ அடர்த்தியான காடுகள் மரங்கள் பரப்பின் (canopy) மூலம் வரையறுக்கப் படுகின்றன: 70%க்கும் அதிகமான வனங்கள் மிகவும் அடர்த்தியானதாகவும் 40 - 70% வனங்கள் நடுத்தர அடர்த்தியானதாகவும் கருதப்படுகின்றன.
- ❖ இயற்கை வனங்களைப் போலன்றி, வணிகத் தோட்டங்கள் வேகமாக வளர்ந்து செயற்கைக் கோள் படங்களில் அவை அடர்த்தியான பரப்பாகக் காட்டப்படுகின்றன.
- ❖ 2019 ஆம் ஆண்டு மதிப்பீட்டில் முதன்முறையாக காடுகளில் உள்ள தாவர இனங்களின் பல்லுயிர் தன்மையும் மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது.
- ❖ மர இன வளங்களின் அடிப்படையில் 325 வகை மர இனங்களுடன் கர்நாடகா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இதில் கர்நாடகாவைத் தொடர்ந்து தமிழ்நாடு (252 இனங்கள்), ஆந்திரா (242 இனங்கள்), கேரளா (238 இனங்கள்) மற்றும் ஒடிசா (192 இனங்கள்) ஆகிய மாநிலங்கள் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன.
- ❖ தாவர இன வளங்களின் அடிப்படையில் 737 வகை தாவர இனங்களுடன் அருணாச்சலப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. இதில் அருணாச்சலப் பிரதேசத்தைத் தொடர்ந்து தமிழ்நாடு (652 இனங்கள்), கர்நாடகா (505 இனங்கள்), ஜம்மு காஷ்மீர் (478 இனங்கள்) மற்றும் கேரளா (477 இனங்கள்) ஆகிய மாநிலங்கள் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

***ISFR 2019ன் முக்கிய அம்சங்கள்***

- ❖ நாட்டின் மொத்த வன மற்றும் மரங்களின் பரப்பளவு 8,07,276 சதுர கி.மீ ஆகும். இது நாட்டின் புவியியல் பரப்பளவில் 24.56% ஆகும்.
- ❖ இது தேசிய வனக் கொள்கை, 1988ல் குறிப்பிடப் பட்டுள்ளதை விட குறைவான சதவிகிதமாகும். இக்கொள்கையில் வனங்களின் பரப்பானது 33% எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.
- ❖ நாட்டின் மொத்த வனப்பகுதி 7,12,249 சதுர கி.மீ ஆகும். இது நாட்டின் புவியியல் பரப்பளவில் 21.67% ஆகும்.
- ❖ நாட்டின் மரங்களின் பரப்பளவு 95,027 சதுர கி.மீ என மதிப்பிடப்பட்டுள்ளது. இது புவியியல் பரப்பளவில் 2.89% ஆகும்.
- ❖ நாட்டில் 42.6 மில்லியன் டன் கார்பன் இருப்பு அதிகரித்துள்ளது.
- ❖ இந்த அறிக்கையின் படி, நாட்டில் 7124 மில்லியன் டன் கார்பன் இருப்பு பதிவு செய்யப் பட்டுள்ளது.
- ❖ நாட்டில் சதுப்பு நிலப் பகுதியானது 54 சதுர கி.மீ (1.10%) அதிகரித்துள்ளது.
- ❖ இது குஜராத் (37 சதுர கி.மீ), மகாராஷ்டிரா மற்றும் ஒடிசாவில் அதிகரித்துள்ளது.
- ❖ மொத்த சதுப்பு நிலப் பகுதியானது 4975 சதுர கிலோமீட்டராக பதிவு செய்யப் பட்டுள்ளது.
- ❖ மேற்கு வங்கமானது 42.45% சதுப்பு நிலப் பகுதியைக் கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து குஜராத் மாநிலம் 23.66% சதுப்பு நிலப் பகுதியையும் அந்தமான் நிக்கோபார் தீவுகள் 12.39% சதுப்பு நிலப் பகுதியையும் கொண்டுள்ளன.
- ❖ நாட்டில் மூங்கிலைக் கொண்டுள்ள மொத்த பகுதி 1,60,037 சதுர கி.மீ என்று கணிக்கப் பட்டுள்ளது.
- ❖ மூங்கிலைக் கொண்டுள்ள பகுதியில் 3,229 சதுர கி.மீ அதிகரிப்பு நிகழ்ந்துள்ளது.
- ❖ மூங்கில் ஆனது புல் என மறுவகைப் படுத்தப்பட்டதால் இந்த அதிகரிப்பு நடந்துள்ளது.

- இந்த மூங்கிலை வெட்டி மீண்டும் நடவு செய்யலாம்.
- மண் கரிமக் கார்பன் (Soil Organic Carbon - SOC) ஆனது காடுகளில் உள்ள மிகப்பெரிய கார்பன் இருப்பைக் குறிக்கின்றது. இது 4,004 மில்லியன் டன்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- நாட்டின் மொத்த வனக் கார்பன் இருப்பில் SOC ஆனது 56% கார்பன் இருப்பைக் கொண்டுள்ளது.

*மாநிலங்கள் குறித்த தரவு*

- காடுகள் பரப்பு அதிகரிப்பின் அடிப்படையில் முன்னணியில் உள்ள ஐந்து மாநிலங்கள் /ஒன்றியப் பிரதேசங்கள் பின்வருமாறு: கர்நாடகா (1,025 சதுர கி.மீ), ஆந்திரப் பிரதேசம் (990 சதுர கி.மீ), கேரளா (823 சதுர கி.மீ), ஜம்மு காஷ்மீர் (371 சதுர கி.மீ) மற்றும் இமாச்சலப் பிரதேசம் (334 சதுர கி.மீ) ஆகும்.
- காடுகள் பரப்பின் அதிகரிப்பில் அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.
- வட கிழக்கு பிராந்தியத்தில் உள்ள மொத்த வனப் பகுதி 1,70,541 சதுர கி.மீ ஆகும். இது அதன் புவியியல் பரப்பளவில் 65.05% ஆகும்.
- அசாம் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களைத் தவிர, அந்தப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள வனப்பகுதிகள் குறைந்து கொண்டே வருகின்றன (765 சதுர கி.மீ - 0.45 சதவீதம்).
- பாரம்பரிய வேளாண்மை நடைமுறையான நாடோடி வேளாண்மையின் (ஜூம் சாகுபடி) காரணமாக வடகிழக்கில் வனங்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது.
- நாட்டில் 62,466 ஈரநிலங்கள் உள்ளன. இது நாட்டில் உள்ள மொத்தப் பரப்பில் 3.83% பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கிடையே குஜராத்தில் அதிக ஈரநிலங்கள் உள்ளன. இதைத் தொடர்ந்து மேற்கு வங்க மாநிலத்தில் அதிக ஈர நிலப்பகுதிகள் உள்ளன.
- மகாராஷ்டிரா மாநிலம் காடுகளில் கிடைக்கும் எரிபொருள் சார்ந்த மரத்தை மிக அதிக அளவில் சார்ந்துள்ளது. இதைத் தொடர்ந்து ஒடிசா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் காடுகளில் கிடைக்கும் எரிபொருள் சார்ந்த மரத்தைச் சார்ந்திருப்பது அதிகமாகும்.
- தீவனம், சிறிய மரம் மற்றும் மூங்கில் ஆகியவற்றைச் சார்ந்து இருப்பதில் மத்தியப் பிரதேச மாநிலம் முன்னணியில் உள்ளது.

*தமிழ்நாடு*

- தமிழ்நாடு அதன் மொத்த பசுமைப் பரப்பில் 83.02 சதுர கி.மீ பரப்பை அதிகரித்துள்ளது.
- மாநிலத்தின் ஒட்டு மொத்த பசுமைப் பரப்பானது தற்போது அதன் புவியியல் பரப்பளவில் 20% ஆக உள்ளது (இலக்கு 33 சதவிகிதம்).
- தமிழ்நாட்டில் சதுப்புநில வனப்பகுதியின் கீழ் உள்ள பகுதியானது நான்கு சதுர கி.மீ ஆகக் குறைந்துள்ளது.
- தமிழ்நாட்டின் சதுப்பு நிலப் பரப்பானது 45 சதுர கி.மீ இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.

*வனப் பரப்பு*

- மொத்த புவியியல் பரப்பில் வனப்பகுதியின் சதவிகிதம்: முதலில் உள்ள ஐந்து மாநிலங்கள் பின்வருமாறு - மிசோரம் (85.41%), அருணாச்சலப் பிரதேசம் (79.63%), மேகாலயா (76.33%), மணிப்பூர் (75.46%) மற்றும் நாகாலாந்து (75.31%) ஆகியவை ஆகும்.

| தர வரிசை | வனப் பரப்பில் முதலில் உள்ள மூன்று மாநிலங்கள் | பகுதி வாரியாக அதிக அளவில் வனப்பகுதிகளைக் கொண்டுள்ள மாநிலங்கள் | சதுப்பு நிலப்பரப்பு உயர்வு |
|---|---|---|---|
| 1 | கர்நாடகா (1025 சதுர கிமீ) | மத்தியப் பிரதேசம் | குஜராத் – 37 சதுர கிமீ |
| 2 | ஆந்திரப் பிரதேசம் (990 சதுர கிமீ) | அருணாச்சலப் பிரதேசம் | மகாராஷ்டிரா - 16 சதுர கிமீ |
| 3 | கேரளா (823 சதுர கிமீ) | சத்தீஸ்கர் | ஒடிசா - 837 சதுர கிமீ |
| 4 | | ஒடிசா | |
| 5 | | மகாராஷ்டிரா | |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★